DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 61/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW1 | Caste | : |
| Name | : உடையம்மை | Calling | : |
| Father / Husband Name | : காளைலிங்கம் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th July 2025.

---------------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் நாட்டரசன் கோட்டையில் வசித்து வருகிறேன். விபத்து காரணமாக இறந்த நபர் என் கணவர். கடந்த 11.07.2021 ம் தேதி கேதத்திற்காக என் கணவரை அழைத்துச் சென்றார்கள். மாலை 04.20 மணிக்கு எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு காளையார்கோவில் - மறவமங்கலம் ரோட்டில் காயாஓடைக்கு அருகே என் கணவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். அங்கிருந்து என் கணவரை சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எனக்கு தகவல் சொன்னதால் நான் மேற்படி மருத்துவமனைக்குச் சென்றுப் பார்த்தேன்.

2) எனது கணவருக்கு தலையில் பலத்த காயமும் முகத்திலும், தோள்பட்டை, காலில் காயம் காணப்பட்டது. அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரையில் உள்ள ஹானாஜோசப் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். சம்பவம் தொடர்பாக நான் தான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 3 மாத காலம் சிகிச்சையில் இருந்தவர்

06.10.2021 ம் தேதி சிகிச்சைப் பலனின்றி இறந்துவிட்டார். பிரேத விசாரணை, பரிசோதனை முடித்து என் கணவரின் உடலை நல்லடக்கம் செய்வதற்காக என் வசம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக எனக்கு தகவல் சொன்ன நபர் பெயர் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் சிவகங்கை அரசு மருத்துவமனை சென்றவுடன் அங்கிருந்த போலீசாரிடம் விபத்து குறித்து தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவம் நடந்து 7 நாள்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் வழக்கறிஞர் எழுதினார்.

2) நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் புகாரில் கண்ட விவரங்கள் எனக்குத் தெரியாது என்றாலும் வழக்கறிஞர்தான் எழுதினார் என்றாலும் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் நான் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது தான் விசாரித்தார்கள். புகார் கொடுக்க என்னுடன் வேறு யாரும் உடன் வந்தார்களா என்றால் சாட்சி கையொப்பம் செய்த கார்த்திகேயன், கண்ணன் ஆகியோர்கள் உடன் வந்தனர். நான் கொடுத்த புகாரில் கார்த்திகேயன், கண்ணன் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் ஆமாம்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.25 16:35:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 61/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 2 | Caste | : |
| Name | : கார்த்திக் | Calling | : |
| Father / Husband Name | : ராம்கண்ணு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th July 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் நாட்டரசன்கோட்டையில் குடியிருந்து வருகின்றேன். நான் சிவில் இன்ஜினியர் வேலை செய்து வருகின்றேன். கடந்த 18.07.2021 ம் தேதி காலை 07.00 மணியளவில் என் முன்னிலையிலும் கண்ணன் என்பவர் முன்னிலையிலும் காளையார்கோவில் காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கு விபத்து நடந்த சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மகஜர், வரைபடம் தயார் செய்தார்கள். மகஜரில் நானும் கண்ணனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் மகஜர், வரைபடம் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தது தான். மகஜரில் உள்ள 1 வது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் சேர்த்து 2 வதாக கண்ணன் சாட்சிக் கையொப்பம் செய்தார். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். அ.சா.1 வழக்கு விபத்து சம்பந்தமாக புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது நானும் உடன் சென்றேனா என்றால் ஆமாம். மகஜர், வரைபடம் தயார் செய்தது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் இல்லை. புகார் கொடுக்க அ.சா.1 வுடன் காவல் நிலையம் சென்றபோது நான் கையொப்பம் எதுவும் செய்தேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையம் சென்றபோது மறுநாள் சம்பவ இடத்திற்கு வரும்படி போலீசார் என்னிடம் தெரிவித்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் சென்றபோது சம்பவம் நடந்து 8 நாள்கள் ஆகிவிட்டதால் அந்த இடத்தில் எந்த தடயமும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடமே செல்லவில்லை என்றாலும் இறந்த நபர் எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.25 16:35:57 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.